4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.**

**அ.வ.எண். 48/2022 நாள்: 11.09.2025 வா.சா.1 – செந்தில்குமார்**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நான் K.வல்லக்குண்டாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு தேங்காய் வியாபாரம் மூலமாக மாதம் ரூ.20,000/– முதல் ரூ.30,000/– வரை வருமானம் வரும். எனக்கு மேற்படி தொழிலை தவிர வேறு எந்த தொழிலும் கிடையாது, வேறு வருமானமும் கிடையாது. எனது குடும்பத்தில் 3 நபர்கள் நான், எனது மனைவி, எனது மகன். எனது மகன் கல்லூரியில் 3வது ஆண்டு படித்து வருகிறான். அவருக்கு எந்த வேலையும் கிடையாது என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு எவ்வித சொத்தும் இல்லை. எனது பெயரில் எவ்வித வண்டி, வாகனமும் இல்லை. தேங்காய் வியாபாரம் செய்யும் போது அதற்கு GST வரி செலுத்த வேண்டும் என்றால் சாட்சி விவசாய பொருள் சம்பந்தப்பட்ட வியாபாரத்திற்கு GST வரி செலுத்த வேண்டியதில்லை என்று கூறுகிறார். நான் வியாபாரம் செய்வது சம்பந்தமாக நான் வணிக வரி எதுவும் செலுத்துவதில்லை. எனக்கு வங்கி கணக்கு உள்ளது. எனக்கு 15 ஆண்டுகளாக வங்கி கணக்கு உள்ளது. எனக்கு தேவனூர்புதூர், பல்லவன் வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. எனக்கு மேற்படி வங்கியில் நடப்பு கணக்கு இல்லை, சேமிப்பு கணக்கு தான் உள்ளது. நான் என்னுடைய வங்கி கணக்கில் ரூ.30 முதல் 40 லட்சம் வரை வைப்பீடு செய்து வரவு செலவு செய்துள்ளேன். நான் வருமான வரி எதுவும் செலுத்துவதில்லை. ரூ.2லட்சத்திற்கு மேல் ஒருவருக்கு வரவு செலவு செய்தால் காசோலை மூலமாகவோ, வங்கி பரிவர்த்தனை மூலமாக தான் செய்யமுடியும் என்று சொன்னால் அவ்வாறு நான் செய்வதில்லை என்று சாட்சி கூறுகிறார்.

நான் தேங்காய் தோட்டக்காரரிடமிருந்து வாங்கும்போது பணம் ரொக்கமாக தான் கொடுப்பேன். நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன், அதை எனக்கு பிரதிவாதி திருப்பி தரவில்லை. எனது வங்கி கணக்கு பட்டியலை என்னால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வங்கியில் கேட்டு பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். நான் எனது வங்கி கணக்கு பட்டியலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் சாட்சி பிரதிவாதியிடமிருந்து நான் தேங்காய் தோப்பில் தேங்காய் வாங்குவேன் அதன் மூலமாக பழக்கம். எனக்கு சுமார் 18 முதல் 20 வருடங்களாக பழக்கம். இந்த வழக்கு சங்கதிக்கு முன்பாக நான் பிரதிவாதியிடம் பணம் கொடுத்து வாங்கியுள்ளேன். மேற்படி விவரத்தை வழக்குரையிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எதிர்வழக்குரையில் அவர் சொல்லியுள்ள விவரங்கள் சரியா என்றால் பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கவில்லை என்று சொல்வது பொய். பிரதிவாதிக்கு குண்டலப்பட்டியில் 4 ஏக்கர் தென்னந்தோப்பு உள்ளது. இதைத்தவிர பிரதிவாதிக்கு என்ன வருமானம் என்று எனக்கு தெரியாது. 4 ஏக்கர் தென்னந்தோப்பில் ஆண்டுக்கு 8 முறை தேங்காய் பறிக்கலாம். ஒரு முறை தேங்காய் பறிப்புக்கு சீசன் காலத்தில் 6 முதல் 7 வண்டி தேங்காய் கிடைக்கும். ஒரு வண்டி என்பது 1000 தேங்காய் எண்ணிக்கை ஆகும். சீசன் என்பது ஒரு ஆண்டுக்கு 4 மாதம் என்றால் சரிதான். மேற்படி நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் காலத்தில் ஒரு தேங்காயின் விலை ரூ.5 முதல் ரூ.15 வரை விலை போகும் என்று சொன்னால் சரியல்ல, ஒரு தேங்காயின் விலை ரூ.18 லிருந்து ரூ.30 வரை விலை போகும் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி விலையை நிருபிப்பதற்கு விலைபட்டியல் தாக்கல் செய்ய இயலுமா என்றால் என்னிடம் எதுவும் இல்லை. 10.03.2021 ல் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். நான் பிரதிவாதி கடன் கேட்ட அன்றே

கடன் தொகையை கொடுக்கவில்லை, 10.03.2021 க்கு ஒரு 25 நாட்களுக்கு முன்பாக பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். நான் தற்போது பணம் இல்லை, தோட்டத்துகாரர்களிடம் தேங்காய் வாங்கி வைத்திருப்பதாகவும், அதை விற்று பணம் தருவதாக பிரதிவாதியிடம் சொன்னேன். பிரதிவாதி என்னுடைய வீட்டிற்கு வந்து கடன் கேட்டார், அப்போது நானும், எனது மனைவியும் வீட்டிலிருந்தோம், வேறு யாரும் உடனில்லை. 09.03.2021 அன்று பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார். என்னிடம் அலைபேசி உள்ளது, அதில் வீட்டில் உள்ளது. நான் எப்போதும் செல்போனை கையில் வைத்து பயன்படுத்துவதில்லை. எனக்கும், பிரதிவாதிக்கும் அலைபேசி மூலமாக தொடர்பு எதுவும் கிடையாது. பிரதிவாதி என்னிடம் எப்படி பணம் கேட்டார் என்றால் நேரில் வீட்டில் வந்து பணம் கேட்டார். பிரதிவாதி எதிர் வழக்குரையில் என்னை யார் என்றே தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது பொய். பிரதிவாதி எனக்கும், அவருக்கும் வரவு செலவு இல்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது பொய். நான் 4/157, வல்லக்குண்டாபுரத்தில் 4வது வார்டில் வசிக்கிறேன். எங்கள் ஊரில் எனது வார்டில் ஈஸ்வரன் மகன் கனகராஜ் என்பவர் வசிக்கிறாரா என்றால் அவர் யார் என்றே தெரியாது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி கனகராஜிம், நானும் ஒன்றாக தான் நீதிமன்றத்திற்கு சென்ற வாய்தாவிற்கு வந்தோமா என்றால் சாட்சி கனகராஜை தெரியாது என்று கூறுகிறார். மேற்படி கனகராஜ் இந்த வழக்கு பிரதிவாதி மீது ஒரு கடனுறுதி சீட்டு வழக்கு தாக்கல் செய்து இந்த வழக்கு வாய்தா நாளிலே வாய்தா போடப்பட்டிருந்தது என்று சொன்னால் அது பற்றி தெரியாது என்று சாட்சி கூறுகிறார். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது திரு.நவநீதன் என்ற வழக்கறிஞரை நியமித்திருந்தேன். அவர் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் தற்போது எனது வழக்கை கவனிக்கவில்லை. மேற்படி ஈஸ்வரன் மகன் கனகராஜ் என்பவர் இந்த வழக்கு பிரதிவாதி மீது மேற்படி நவநீத கிருஷ்ணன் வழக்கறிஞர் மூலமாக

இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.45/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சாட்சி அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். மேற்படி வழக்கில் கனகராஜ் சாட்சியம் அளிக்கும் போது நான் இந்நீதிமன்றத்தில் அதை பார்த்துக்கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி உடுமலைபேட்டை தாலுகாவில் வசிப்பதாக நான் என்னுடைய வழக்குரையில் சொல்லியிருந்தால் அது பொய் என்று சொன்னால் ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதியின் சரியான முகவரி தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்றால் குண்டலபட்டி, சிஞ்சுவாடி கிராமத்தில் வசித்து வருகிறார். மேற்படி சிஞ்சுவாடி, பொள்ளாச்சி தாலுகாவை சேர்ந்தது என்று சொன்னால் சாட்சி அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். நான் கடன் கொடுப்பதற்கு முந்தைய நாள் வந்து பிரதிவாதி கடன் கேட்கும் போது நான் பணம் தயாராகிவிட்டது மறுநாள் வந்து வாங்கிகொள்ளலாம் என்று சொன்னேன். கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்து வாங்கிகொள்ளலாம் என்றும் சொன்னேன். மறுநாள் நந்தகுமாரும், சாட்சிகளும் எனது வீட்டிற்கு வந்தார்கள். 10.03.2021 அன்று பிரதிவாதி எனது வீட்டிற்கும் வரவில்லை, வீட்டிற்கு வந்து கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஸ்டாம்ப் பேப்பருடன் அதாவது கடனுறுதி சீட்டுடன் வந்தார், 1 ரூபாய் ஸ்டாம்ப் இரண்டையும் பிரதிவாதி கையோடு எடுத்து வந்தார், இரண்டு பேர் அவருடன் வந்தார்கள். கடனுறுதி சீட்டு கொண்டு வந்திருப்பதாகவும், அதை எழுதி கடன் வாங்கிகொள்ளலாம் என்று என்னிடம் கேட்டார். நான் கடனுறுதி சீட்டை எழுத சொன்னேன். பிரதிவாதி உடன் வந்தவர் கடனுறுதி சீட்டை எழுதினார். கல்யாண சுந்தரம் என்பவர் கடனுறுதி சீட்டை எழுதினார். பிரதிவாதி அவருடைய முகவரியை அப்போது சொன்னார், நான் என்னுடைய முகவரியை சொன்னேன். இரண்டு பேரும் படித்து பார்த்தோம். என்னுடைய முதல் விசாரணையை படித்து பார்க்க என்னால் முடியவில்லை, எனவே கடனுறுதி சீட்டை நான் படித்து பார்த்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பின்பு கல்யாண சுந்தரம்

சாட்சி கையொப்பம் போட்டார். ராஜ்குமார் என்ற உடன் வந்த நபரும் சாட்சி கையொப்பம் போட்டார். அதற்கு முன்பாக பிரதிவாதி 1 ரூபாய் 2 ஸ்டாம்பை ஒட்டி ஸ்டாம்புக்கு மேலே ஆங்கிலத்தில் பிரதிவாதி ஒரு கையொப்பத்தையும், அதற்கு கீழே ஒரு கையொப்பத்தையும் போட்டார். கல்யாண சுந்தரம் எழுதிய கடனுறுதி சீட்டில் தான் பிரதிவாதி கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். கல்யாண சுந்தரம் தமிழில் கையொப்பம் செய்தார், பின்னிட்டு கீழே கடனுறுதி சீட்டில் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டார். சாட்சி ராஜ்குமார் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டார். கடனுறுதி சீட்டில் சாட்சியின் முகவரி ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. கல்யாண சுந்தரம் ஆங்கிலத்தில் முகவரி எழுதியுள்ள கடனுறுதி சீட்டில் தான் பிரதிவாதி கடன் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல, ஆங்கிலத்தில் முகவரி எழுதவில்லை கல்யாண சுந்தரம் கையொப்பம் மட்டும் தான் ஆங்கிலத்தில் போட்டார். கடனுறுதி சீட்டை நான் கடைசியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது பார்த்தேன், அதன் பிறகு பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டு தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள எழுத்து என்ன நிற மையில் அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி அச்சடித்த கடனுறுதி சீட்டில் பேனால் எழுதப்பட்டது என்று கூறுகிறார். மேற்படி அச்சடித்த எழுத்து ஊதா நிறத்தில் எழுதப்பட்டுள்ளது. பிரதிவாதி கையொப்பம் இட்டதாக சொல்லப்படும் மையின் நிறத்திற்கும், கடனுறுதி சீட்டு எழுதப்பட்டுள்ள வாசகங்களில் உள்ள எழுத்தின் மையின் நிறத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலும், வழக்குரையிலும் பிரதிவாதி எங்கு வந்து கடன் வாங்கினார்? கல்யாண சுந்தரம், ராஜ்குமார் ஆகியோர்கள் எங்கு வந்து சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்ற விவரத்தையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கல்யாண சுந்தரம், ராஜ்குமார் ஆகியோரை எனக்கு கடன் கொடுப்பதற்கு முன்பு தெரியாது. மேற்படி நபர்களை

நான் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் விசாரிப்பேன். பிரதிவாதி என்னிடம் ஒரு போதும் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுக்கவும் இல்லை, கடன் வாங்கியதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் கடன் கொடுக்காததால், நான் கடனை திருப்பி கேட்கவே இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டார். பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கியதாக எனக்கு தெரியும், ஆனால் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் அவருடைய கையொப்பமா, இல்லையா என்று எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பமாக சொல்லப்படும் கையொப்பமும், ஒப்புகை அட்டையில் உள்ள பிரதிவாதியின் கையொப்பமாக சொல்லப்படும் கையொப்பமும் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான். என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்திருப்பவர் எனது ஒன்று விட்ட சகோதரர் அவர் பெயர் மருதமுத்து, அவருடைய தந்தை பெயர் மயில்சாமி. மேற்படி மருதமுத்துவுக்கும் இந்த வழக்கிற்கும், ஈஸ்வரன் மகன் கனகராஜ் தாக்கல் செய்த வழக்கிற்கும் சம்பந்தம் உண்டா என்றால் சாட்சி இந்த வழக்கிற்கும் மருதமுத்துவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறுகிறார். பிரதிவாதிக்கு கடனுறுதி சீட்டில் குறிப்பிட்டுள்ள கடன் தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றும், பிரதிவாதி கடன் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை தேங்காய் வியாபாரம் மூலமாக எனக்கு வரவேண்டியவை, மேற்படி பணத்தை செஞ்சேரிபுத்தூர் மருதமுத்து, (அவருடைய தந்தை பெயர் தெரியாது) நெய்காரப்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் ஆகியோரிடமிருந்து நான் பெற்று வைத்திருந்தேன், நான் இருப்பு வைத்திருந்த தேங்காயை விற்றும் பணம் வைத்திருந்தேன். நான் சொல்வது போல் மேற்படி நபர்களிடமிருந்து பணத்தை பெற்று பிரதிவாதிக்கு நான் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு சாட்சியாக குறிப்பிட்டுள்ள கல்யாண சுந்தரம், ராஜ்குமார்

ஆகியோர்களை யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. நான் கல்யாண சுந்தரம், ராஜ்குமார் ஆகியோர்கள் பொய்யாக பிரதிவாதியின் கையொப்பத்தை உண்டாக்கி பொய்யாக கடனுறுதி சீட்டை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள பிரதிவாதி போட்டதாக சொல்லப்படும் இரு கையொப்பங்களுக்கிடையே வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்குரை மதிப்பீடு சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பமல்ல. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரதிவாதியிடம் நான் பலமுறை கடனை திருப்பி கேட்டதாக சொல்லியுள்ளேன், எங்கு வைத்ததாக கேட்டேன் என்றால் சாட்சி நான் நேரில் பார்க்கும் போது டீக்கடையில் வைத்து பிரதிவாதியிடம் கேட்டேன். நான் பிரதிவாதியிடம் ஒரு போதும் கடன் தொகையை திருப்பி கேட்டதே இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்காத காரணத்தினால் தாவா தொகையை பிரதிவாதி எனக்கு செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நான் அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளவும் இல்லை, ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பமும் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி என் மீதும் கல்யாண சுந்தரம், ராஜ்குமார் மீது இந்த வழக்கு ஆவணங்களை பார்த்த பிறகு பொய் ஆவணங்கள் தயாரித்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. போலிசார் மேற்படி புகாரை சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டார்கள் என்றும், மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டு மறுபயனற்றது, எனவே அதனடிப்படையில் எனக்கு பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி செஞ்சேரிபுதூர் மருதமுத்துவையும், நெய்காரப்பட்டி ஆறுமுகத்தையும் சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் சாட்சி விசாரிக்கலாம் என்று கூறுகிறார். கல்யாண சுந்தரம் எழுதியதாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டு

தான் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த போது எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு என்று நான் சொல்லியுள்ளேன் என்றும், இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு ராஜ்குமார் என்பவரால் எழுதப்பட்டுள்ளது என்பதால் மேற்படி கடனுறுதி சீட்டு உண்மையானதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.